**அக்டோபர் – 22**

# TNPSC துளிகள்

- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நிர்வாகக் குழுவானது, 2030 ஆம் ஆண்டு நூற்றாண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக அகமதாபாத் நகரத்தைப் பரிந்துரைத்துள்ளது.
- திருநர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சம வாய்ப்புக் கொள்கையை உருவாக்க உச்ச நீதிமன்றம் நியமித்த குழுவின் உறுப்பினராக திருநர்கள் உரிமை ஆர்வலர் அக்காய் பத்மஷாலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
    - உச்ச நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் கர்நாடகாவில் இருந்து இடம் பெற்ற முதல் திருநர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- முதுகெலும்பு ஆரோக்கியம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கோளாறுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2025 ஆம் ஆண்டிற்கான உலக முதுகெலும்பு தினம் ஆனது ஆண்டுதோறும் அக்டோபர் 16 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
    - 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Invest in Your Spine" என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## SLAS 2025 அறிக்கை





- 45,924 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 5 மற்றும் 8 ஆம் வகுப்புகளைச் சேர்ந்த 980,340 மாணவர்களின் கற்றல் சார்ந்த விளைவுகளை மாநில அளவிலான சாதனை கணக்கெடுப்பு (SLAS) 2025 மதிப்பீடு செய்தது.
- மதிப்பீட்டு வடிவமைப்பிற்காக ப்ளூமின் என்ற வகை பிரிப்பைப் பயன்படுத்தி, தமிழ், ஆங்கிலம், கணிதம், சுற்றுச்சூழல் ஆய்வுகள், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் உள்ளிட்ட முக்கியப் பாடங்களில் இந்தக் கணக்கெடுப்பு கவனம் செலுத்தியது.

- 3 ஆம் வகுப்பு அளவிலான மாநில சராசரி மதிப்பெண்கள் தமிழ் 67%, ஆங்கிலம் 69%, கணிதம் 54%, மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் 76% ஆகும்.
- 5 ஆம் வகுப்பு அளவிலான மாநில சராசரி மதிப்பெண்கள் தமிழ் 76%, ஆங்கிலம் 51%, கணிதம் 57%, மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வுகள் 57% ஆகும்.
- 8 ஆம் வகுப்பு அளவிலான மாநில சராசரி மதிப்பெண்களில் தமிழ் 52%, ஆங்கிலம் 39%, கணிதம் 38%, அறிவியல் 37% மற்றும் சமூக அறிவியல் 54% என்ற சரிவுகள் பதிவாகின.
- மாவட்ட வாரியான பகுப்பாய்வு ஆனது, 22 மாவட்டங்கள் ஆனது மாநில சராசரியை விட அதிகமாகவும், 15 மாவட்டங்கள் அனைத்துப் பாடங்களிலும் குறைவாகவும் செயல்பட்டதைக் காட்டியது.
- தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் 2025 ஆம் ஆண்டு மாநில அளவிலான சாதனை கணக்கெடுப்பில் (SLAS) மதுரை மாவட்டம் ஒட்டு மொத்தமாக மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- கன்னியாகுமரி 66.5% உடன் மாநிலம் அளவில் முன்னிலை வகிப்பதுடன், தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் பிற மாவட்டங்களில் கன்னியாகுமரி, தென்காசி மற்றும் சிவகங்கை ஆகியவை அடங்கும்.

# தேசியச் செய்திகள்


## இருமல் நிவாரண மருந்துகள் குறித்த பாதுகாப்பு தரநிலை




- 45% டைஎதிலீன் கிளைகோல் (DEG) கொண்ட (நச்சுத் தன்மை கொண்ட தொழில்துறை பயன்பாட்டுக் கரைப்பான்) கோல்ட்ரிஃப் இருமல் நிவாரண மருந்தினை உட் கொண்டதால் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் குறைந்தது 22 குழந்தைகள் உயிரிழந்தனர்.
- இந்த இருமல் நிவாரணி தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு மத்தியப் பிரதேசத்தின் பல மாவட்டங்களில் விநியோகிக்கப்பட்டது.
- கலப்படமாக்கப்பட்ட இந்திய நிவாரணிகள் காம்பியா மற்றும் உஸ்பெகிஸ்தானில் குழந்தைகளின் உயிரிழப்புகளை ஏற்படுத்தியதுடன், 2022 ஆம் ஆண்டில் இதே போன்ற துயரங்கள் நிகழ்ந்தன.
- இந்தியாவின் இரட்டை மருந்து ஒழுங்குமுறை அமைப்பில் மத்திய மருந்து தரக்

கட்டுப்பாட்டு அமைப்பு (CDSCO) மற்றும் மாநில மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்புகள் ஆகிய இரண்டும் அடங்கும்.

## புதிய EPF விதிகள் 2025





- ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) ஆனது தற்போது ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி (EPF) தொகையில் 75% தொகையினை வேலை வாய்ப்பு இழப்புக்குப் பிறகு உடனடியாக திரும்பப் பெற அனுமதிக்கிறது.
- வேலைவாய்ப்பின்மை ஏற்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குப் பிறகு மீதமுள்ள 25% EPF தொகையை திரும்பப் பெறலாம்.
- இந்தப் புதிய விதிகள் ஆனது ஊழியரின் 10 ஆண்டு கால சேவைப் பதிவில் இடையிடாமல் இருப்பதையும் ஓய்வூதியத் தகுதி பேணப்படுவதையும் உறுதி செய்கின்றன.
- வேலைவாய்ப்பிழந்த பிறகு பணம் எடுக்கும் காலம் இரண்டு மாதங்களிலிருந்து ஓராண்டாக நீட்டிக்கப்பட்டுள்ளது.
- முதியவர்கள் மற்றும் தொலைதூர உறுப்பினர்களுக்கான ஆயுள் சான்றிதழ் சரி பார்ப்பு தற்போது தபால் சேவைகள் மூலம் வீட்டிலேயே செய்யப்படும்.

## இந்தியாவின் உரத் துறையில் உள்ள ஏற்றத்தாழ்வு

- இந்தியாவில் உர மானியங்கள் ஆனது நைட்ரஜன் அல்லது யூரியா ஆகியவற்றின் மீதே அதிகளவில் வழங்கப்படுகின்றன.
- பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியத்துடன் ஒப்பிடும் போது குறைந்த விலை காரணமாக யூரியாவின் அதிகப்படியான பயன்பாடு ஆனது, ஊட்டச்சத்து ஏற்றத்தாழ்வு மற்றும் தேக்க நிலையிலான பயிர் விளைச்சலை ஏற்படுத்துகிறது.
- வேளாண் உற்பத்தித்திறன் குறைவதால் பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களுக்காக இந்தியா இறக்குமதியை அதிகளவில் சார்ந்துள்ளது.
- விவசாயிகள் டிஜிட்டல் விற்பனை நிலையங்கள் மூலம் மானிய விலையில் அதனை

அணுகுவதுடன், மொத்த உர மானியக் கட்டணத்தில் யூரியாவின் பங்கு கிட்டத்தட்ட 70% ஆகும்.

- இறக்குமதியைக் குறைப்பதற்காக உத்தரப் பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, பீகார் மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்களில் உள்ள ஐந்து புதிய யூரியா ஆலைகளில் ஆண்டுதோறும் 6.5 மில்லியன் டன் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்திய மண்ணில் சுமார் 43% துத்தநாகக் குறைபாடு உள்ளது என்ற நிலையில் கிட்டத் தட்ட 18% போரான் பற்றாக்குறை உள்ளது என்பதோடு மேலும் இது மண்ணின் ஆரோக்கியத்தையும் பயிர் உற்பத்தியையும் மோசமாக்குகிறது.




# பொருளாதாரச் செய்திகள்

## ஜப்பானில் UPI கொடுப்பனவுகள்




- புதிய NPCI- NTT கூட்டாண்மையானது இந்தியப் பயணிகளுக்கான டிஜிட்டல் கொடுப்பனவுகளை எளிதாக்குவதையும், அதிக எண்ணிக்கையிலான பண வழங்கீட்டு விருப்பத் தேர்வுகளுடன் ஜப்பானிய வணிகர்களை ஆதரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியச் சுற்றுலாப் பயணிகள் தற்போது ஜப்பானில் உள்ள NTT தரவு நிர்வகிக்கப் படும் வணிக இடங்களில் தங்கள் UPI செயலிகளைப் பயன்படுத்தி QR குறியீடுகளை

ஸ்கேன் செய்வதன் மூலம் பணம் செலுத்தலாம்.

- NTT தரவு ஆனது ஜப்பானின் மிகப்பெரிய அட்டை சார் கட்டணச் செயலாக்க வலையமைப்பான CAFIS (கடன் மற்றும் நிதித் தகவல் மாறுதல் அமைப்பு) அமைப்பினை இயக்குகிறது.
- தற்போது UPI ஏற்றுக் கொள்ளப்பட்ட நாடுகளில் பூடான், பிரான்சு, மொரிஷியஸ், நேபாளம், சிங்கப்பூர், இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கத்தார் ஆகியவை அடங்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## அஸ்த்ரா மார்க் 2

- அஸ்த்ரா மார்க் 2 என்பது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பினால் உருவாக்கப்பட்டு வரும் காட்சிப்புல வரம்பிற்கு அப்பாற்பட்ட வானிலிருந்த படியே வானில் உள்ள இலக்கினைத் தாக்கி அழிக்கும் (BVR) எறிகணை ஆகும்.
- இது அஸ்த்ரா மார்க் 1 எறிகணையின் மேம்படுத்தப்பட்ட வடிவமாகும்.
- ஏற்கனவே இந்திய விமானப் படையில் பயன்பாட்டில் உள்ள அஸ்த்ரா மார்க் 1 ஆனது, LCA தேஜாஸ் மற்றும் Su-30 MKI ஆகிய வான்வழி அமைப்புகளுடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது.
- மார்க் 2 ஆனது, 200 கிலோ மீட்டருக்கு அப்பால் நீடிப்பதற்கான வாய்ப்புடன் 150 முதல் 180 கிமீ வரையிலான தாக்கும் வரம்பைக் கொண்டிருக்கும்.
- மேக் 4.5 வரையிலான வேகத்தில் பயணிக்கின்ற இது Su-30 MKI ஒருங்கிணைப்பில் இருந்து ஓர் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரேடியோ அதிர்வெண் (RF) தேடு பொறியைக் கொண்டுள்ளது.





## இராணுவப் போர் பயன்பாட்டுப் பாராசூட் அமைப்பு

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இராணுவப் போர் பயன்பாட்டுப் பாராசூட் /வான்குடை மிதவை அமைப்பு (MCPS) ஆனது இந்திய விமானப் படையால் 32,000 அடி உயரத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

- MCPS என்பது இந்திய ஆயுதப் படைகளால் செயல்பாட்டு ரீதியாக பயன்பாட்டில் உள்ள ஒரே பாராசூட் அமைப்பாகும் என்ற நிலையில் இது 25,000 அடி உயரத்திற்கு மேல் பயன்படுத்தப்படக் கூடியது.
- இது குறைந்த இறங்கு விகிதம், அதிக திசைமாற்றம் மற்றும் இந்தியச் செயற்கைக் கோள் திரளின் வழிசெலுத்தல் (NavIC) அமைப்பினைப் பயன்படுத்தி துல்லியமான வழி செலுத்தல் போன்ற மேம்பட்ட உத்தி சார் திறன்களைக் கொண்டுள்ளது.





## ககன்யான் கலத்தில் அவசரகால வெளியேறும் உத்தி




- வளிமண்டல நுழைவுக் கட்டத்தில் விண்கல ஏவுதலின் போதான அவசர காலத்தின் போது விண்வெளி வீரர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக ககன்யான் கலம் விண்வெளி வீரர்கள் தப்பிக்கும் அமைப்பை (CES) பயன்படுத்த உள்ளது.
- CES என்பது ஏவு வாகனத்தின் மேற்புறத்தில் வைக்கப்பட்டுள்ள ஓர் இழுப்பான் வகை அமைப்பாகும் என்பதோடு, இது எரிபொருள் வேகமாக பற்றும் திட மோட்டார்களைப் பயன்படுத்தி, முன்னேற முடியாத ஏவு வாகனத்திலிருந்து வீரர்கள் பெட்டகத்தினை வெளியே இழுக்கிறது.
- இது ஏவு கலத்தினை விஞ்ச ஈர்ப்பு விசையில் 10 மடங்கு வரையிலான முடுக்கத்தினை உருவாக்க கூடியது என்பதோடு இது அப்பெட்டகம் பாதுகாப்பான தொலைவினை விரைவாக அடைவதை உறுதி செய்கிறது.

- ஏவு கலத்தில் இருந்து பிரிந்த பிறகு, கடலில் பாதுகாப்பான இறக்கத்திற்காக பல-நிலை கொண்ட பாராசூட் அமைப்பு விண்வெளி வீரர்கள் பெட்டகத்தின் வேகத்தினை மெதுவாக்குகிறது.
- ஓர் உள்ளக ஒருங்கிணைந்த வாகனச் சூழல் மேலாண்மை (IVHM) அமைப்பு ஆனது இந்தச் செயல்பாட்டினைக் கண்காணித்து, முக்கியமானத் தோல்விகளின் போது CES அமைப்பினைச் செயல்படுத்துகிறது.

## சிரோனின் பரிணாமம் அடையும் வளைய அமைப்பு



Astronomers confirm Chiron, an icy centaur between Saturn and Uranus, has evolving rings — offering fresh insights into small-body dynamics and ring formation beyond the giant planets.

- சனி மற்றும் யுரேனஸுக்கு இடையில் அமைந்துள்ள சிரோன் எனப்படும் ஒரு பனிக் கட்டி நிறைந்த சென்டாரைச் சுற்றி விரிந்து வரும் ஒரு வளைய அமைப்பை வானியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- உள் வளையங்கள் சிரோனின் மையத்திலிருந்து தோராயமாக 273 கிமீ, 325 கிமீ மற்றும் 438 கிமீ தொலைவில் அமைந்துள்ளதுடன் நான்கு தனித்துவமான வளையங்கள் அடையாளம் காணப்பட்டன.
- நான்காவது, வெளிப்புற வளையம் ஆனது சுமார் 1,400 கிமீ தொலைவில் கண்டறியப் பட்டது என்பதோடு மேலும் இதன் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இது மேலும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- சிரோனின் வளையங்கள் நீர், பனி மற்றும் சிறிய பாறைப் பொருட்களால் ஆனதாகத் தெரிகிறது என்பதோடு இது கடந்த கால மோதல்கள் அல்லது நிலவு உருவாக்கக் குப்பைகளிலிருந்து உருவாகியிருக்கலாம்.
- சிரோன் ஆனது வளையங்களுடன் கூடிய சாரிக்லோ, ஹௌமியா மற்றும் குவோர் ஆகிய மற்ற மூன்று சிறிய சூரிய மண்டல அமைப்புகளின் பட்டியலில் இணைகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## இம்பேடியன்ஸ் இராஜிபியானா

- அருணாச்சலப் பிரதேசத்தின் மேற்கு கமெங் மாவட்டத்தில் உள்ள ஷெர்கானில் இம்பேடியன்ஸ் இராஜிபியானா என்ற ஒரு புதிய பால்சம் மலர்/காசித் தும்பை மலர் இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- இது ஷெர்காவ்ன் பகுதியில் மட்டுமே காணப்படுகின்றது.

- இந்தத் தாவரம் ஆனது பிரகாசமான பூக்கள் மற்றும் வெடித்தல் மூலமான விதைப் பரவல் வழிமுறைகளுக்கு பெயர் பெற்ற இம்பேடியன்ஸ் இனத்தைச் சேர்ந்தது.
- இந்தியாவில் சுமார் 230 பால்சம் இனங்கள் உள்ளன என்பதோடு இதில் இம்பேடியன்ஸ் பால்சமினா போன்ற பூர்வீக மற்றும் அலங்கார மலர் வகைகள் உள்ளன.
- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் கண்டறியப்பட்ட முந்தைய கண்டுபிடிப்புகளில் இம்பேடியன்ஸ் காட்ஃப்ரேய் மற்றும் இம்பேடியன்ஸ் சஷின்போர்த்தகுரி ஆகியவை அடங்கும்.




## இந்தியப் பூங்காக்களில் பல்லுயிர்ப் பெருக்க இழப்பு – IUCN




- IUCN அமைப்பானது மேற்குத் தொடர்ச்சி மலைகள், அசாமில் உள்ள மனாஸ் தேசியப் பூங்கா மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள சுந்தரவன தேசியப் பூங்கா ஆகியவற்றை "குறிப்பிடத்தக்க வகையில் கவலைக்குரிய" தளங்களாக வகைப்படுத்தியுள்ளது.
- இந்தப் பூங்காக்கள் முறையே பூடான் மற்றும் வங்காளதேசம் வரை நீண்டுள்ள எல்லை தாண்டிய பகுதிகளைக் கொண்டுள்ளன.

- ஆசியாவில் உள்ள 11 பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் "நல்ல நிலையில் உள்ளவை" என்று மதிப்பிடப்பட்ட ஒரே இந்தியத் தளம் சிக்கிமின் கஞ்சன்சங்கா தேசியப் பூங்கா ஆகும்.
- IUCN உலகப் பாரம்பரியக் கண்ணோட்டத்தின் 4வது அறிக்கையானது, ஆசியாவின் இயற்கை உலகப் பாரம்பரியத் தளங்களில் 30% ஆனது குறிப்பிடத்தக்க வளங்காப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது என்பதைக் குறிப்பிடுகிறது.
- பருவநிலை மாற்றம் ஆனது தற்போது இந்தத் தளங்களுக்கான முன்னணி அச்சுறுத்தலாக உள்ளது என்பதோடு அதைத் தொடர்ந்து சுற்றுலா மற்றும் ஆக்கிரமிப்பு அயல் உயிரினங்கள் உள்ளன.
- சாலைகள், இரயில்வே மற்றும் மரம் வெட்டுதல் மற்றும் வாழ்விட அழிப்பு போன்ற மனித நடவடிக்கைகள் பாதுகாக்கப்பட்டப் பகுதிகளுக்குள் பல்லுயிர்ப் பெருக்கத்தின் இழப்புக்கு முக்கியக் காரணங்களாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## WDMMA 2025 தரவரிசை




- உலக நவீன இராணுவ விமான இயக்குநரகத்தின் (WDMMA) சமீபத்தியத் தரவுகளில் அமெரிக்க விமானப்படை (USAF) தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து ரஷ்யா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- இந்தியா சீனாவை முந்தி, உலகளவில் மூன்றாவது சக்தி வாய்ந்த விமானப்படை என்ற அந்தஸ்தினைப் பெற்றது.
- சீனா நான்காவது இடத்தில் உள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து ஜப்பான், இஸ்ரேல், பிரான்ஸ், ஐக்கியப் பேரரசு, தென் கொரியா மற்றும் இத்தாலி ஆகியவை உள்ளன.

# மாநிலச் செய்திகள்

## நயிங் நீர்மின் நிலையம்

- நயிங் நீர்மின் நிலையம் என்பது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள சியோம் (யோம்கோ) நதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள 1,000 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையமாகும்.
- இதன் செயல்பாடுகள் 2032 ஆம் ஆண்டில் தொடங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- இது ஆண்டுதோறும், ஒரு மணி நேரத்திற்கு 4,966.77 ஜிகாவாட் (GWh) அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- சியோம் நதி என்பது அருணாச்சலப் பிரதேசம் வழியாக பிரம்மபுத்திரா நதியின் வலது கரையில் பாயும் 170 கிமீ நீளமுள்ள துணை நதியாகும்.
- இந்த மின் நிலையம் அமைக்கப்படுகின்ற இடத்திற்கு அருகில் சியோம் ஆற்றின் கிழக்குக் கரையில் மௌலிங் தேசியப் பூங்கா அமைந்துள்ளது.




## உத்தரப் பிரதேச மாநிலத்தின் மத மாற்றச் சட்டம்




- உத்தரப் பிரதேசத்தின் ஃபதேபூர் மாவட்டத்தில் இந்துக்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு "பெருமளவில் மதமாற்றம்" செய்ததாகக் கூறி பதிவு செய்யப்பட பல முதல் தகவல் அறிக்கைகளை (FIR) உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- 2021 ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச மாநிலத்தின் சட்ட விரோத மதமாற்றத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப் பட்டன.
- உத்தரப் பிரதேசச் சட்டத்தின்படி, அப்போதைய நிலையின்படி, பாதிக்கப்பட்டவர்கள் (அல்லது அவர்களது உறவினர்கள்) மட்டுமே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருக்க முடியும்.

- குற்றவியல் சட்டத்தினை எந்தத் தவறும் இழைக்காத மக்களை துன்புறுத்துவதற்கான ஒரு கருவியாக மாற்ற அனுமதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

## DhaRti BioNest தொழிற்காப்பு மையம்

- கர்நாடகாவின் தார்வாடில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் DhaRti BioNest தொழிற்காப்பு மையம் திறக்கப்பட உள்ளது.
- இந்த மையம் ஆனது கல்வி ஆராய்ச்சி மற்றும் தொழில்துறை சார்ந்த தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இது ஏற்கனவே Elevate Karnataka திட்டத்தின் மூலம் 15 புத்தொழில் நிறுவனங்களுக்கு தலா 50 லட்சம் ரூபாய் ஆரம்ப கட்ட நிதியுதவியுடன் ஆதரவளித்துள்ளது.
- இந்த முன்னெடுப்பானது உயிரி தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி சபையின் (BIRAC) BioNest திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- இந்த தொழிற்காப்பு மையமானது அந்தப் பிராந்தியத்தில் புதுமை மற்றும் ஆராய்ச்சி சார்ந்த தொழில்முனைவை ஊக்குவிக்கும்.

# விளையாட்டுச் செய்திகள்

## International Assists பட்டியல்

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அர்ஜென்டினா அணியானது புயூர்ட்டோ ரிக்கோ அணியை 6–0 என்ற கணக்கில் வென்றதையடுத்து, ஆடவர்களுக்கான சர்வதேசக் கால்பந்து போட்டியில் லியோனல் மெஸ்ஸி 60 கோல் அசிஸ்ட்களுடன் (கோல் எடுக்க பந்தினை மாற்றுவதற்கான உதவி) புதிய சாதனையை படைத்துள்ளார்.
- மெஸ்ஸியின் முதல் சர்வதேச அசிஸ்ட் ஆனது 2006 ஆம் ஆண்டில் FIFA உலகக் கோப்பைப் போட்டியில் அர்ஜென்டினா அணி, செர்பியா மற்றும் மாண்டினீக்ரோ அணியை 6–0 என்ற கணக்கில் வென்ற போது பதிவு செய்யப் பட்டது.
- பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மற்றொரு 6-0 என்ற கோல் கணக்கிலான வெற்றியில் அசிஸ்ட் சாதனையை முறியடித்தார் என்ற நிலையில் இது கால்பந்து வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைந்தது.

- ஆடவர் சர்வதேசக் கால்பந்துப் போட்டியில் தற்போதைய சிறந்த அசிஸ்ட் வீரர்கள்: மெஸ்ஸி (60), நெய்மர் (58), டோனோவன் (58), புஸ்காஸ் (53), டி ப்ரூய்ன் (52) ஆகியோர் ஆவர்.
- 38 வயதான மெஸ்ஸி தற்போது தனது ஒட்டு மொத்த தொழில்முறை வாழ்க்கையில் 400 அசிஸ்ட்களை எட்டுவதற்கு இரண்டு அசிஸ்ட்கள் மட்டுமே உள்ளன.





# இதரச் செய்திகள்

## அரேபியக் கடலில் சிறிய வெப்ப நீர் திரட்சி

- அரேபியக் கடலில், ஒவ்வோர் ஆண்டின் ஏப்ரல்-மே மாதங்களிலும் கேரளப் பகுதி கடற் கரைக்கு அருகில் 30°C கடல் மேற்பரப்பு வெப்பநிலையை விட அதிகமான அளவில் சிறிய வெப்ப நீர் திரட்சி உருவாகும்.
- இந்த வெப்பமான நீர் திரட்சி உள்ளூர் வெப்பச் சலனத்தைத் தூண்டி, இந்திய துணைக் கண்டத்தை நோக்கி தென்மேற்கு பருவக் காற்றை ஈர்க்க உதவுகிறது.
- எல் நினோ நிகழ்வுகள் பசிபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல்களில் காற்றோட்ட வடிவங்களைச் சீர்குலைப்பதன் மூலம் இந்திய கோடை கால பருவமழையை தாமதப் படுத்துகின்றன.
- எல் நினோவுக்குப் பிறகு, 4 முதல் 5 மாதங்களுக்குப் பிறகு இந்தியப் பெருங்கடல் வெப்ப விரிவாக்க விளைவு ஆனது இந்தியப் பெருங்கடலில் தாமதமான வெப்ப மயமாதல் நிகழ்வினை ஏற்படுத்துகிறது.
- கிழக்கத்தியக் காற்று மேற்பரப்பு குளிர்ச்சியைக் குறைத்து, தென்கிழக்கு அரேபியக் கடலில் சிறிய வெப்ப நீர் திரட்சியைத் தீவிரப்படுத்துகிறது.
- ஒரு வலுவான வெப்ப நீர் திரட்சி குறைந்த அழுத்தத்தை உருவாக்குகிறது என்பதோடு

இது கேரளாவை நோக்கி ஈரமான காற்றை இழுத்து, சரியான நேரத்தில் பருவமழை தொடங்குவதை ஆதரிக்கிறது.

- புது டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் உருவகப் படத்தில் காட்டப் பட்டுள்ளது போல 2010 ஆம் ஆண்டில் வலுவான எல் நினோ இருந்த போதிலும், இந்த வெப்ப நீர் திரட்சி காரணமாக பருவமழை முன் கூட்டியே தொடங்கியது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★